## Current Affairs, October 26 and 31 - 2024

1. முத்ரா கடன் திட்டத்தின் தற்போது கடன் வரம்பு எவ்வளவு

(A) 20 லட்சம் (B) 30 லட்சம்

(C) 25 லட்சம் (D) 10 லட்சம்

(E) விடை தெரியவில்லை

**விடை- 20 லட்சம்** ( 10 லட்சத்திலிருந்து 20 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது)

**முத்ரா திட்டம் (Micro Units Development & Refinance Agency Ltd)**

- **தொடக்கம்** - 8 ஏப்ரல் 2015
- **அமைச்சகம்** - நிதி அமைச்சகம்
- **நோக்கம்** - பிரதான் மந்திரி முத்ரா யோஜனாவின் (PMMY) முதன்மை நோக்கம் நிதி மற்றும் பிற ஆதரவை வழங்குவதன் மூலம் இந்தியாவின் குறு நிறுவனத் துறையை மேம்படுத்துவதாகும்
- 2024 25 ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் இல் அறிவிக்கப்பட்டது
- **இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன்கள்**
  1. சிஷு - ரூ.50 ஆயிரம் வரை
  2. கிஷோர் - ரூ. 50,000 முதல் ஐந்து லட்சம் வரை
  3. தருண் - ரூ. 10 இலட்சம்

2. உலக வங்கி சார்பில் நடைபெற்ற சர்வதேச பொருளாதார சூழல் மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்கம் குறித்த நிகழ்ச்சி எங்கு நடைபெற்றது

(A) நியூயார்க் (B) லண்டன்

(C) வாஷிங்டன் (D) ஜெனிவா

(E) விடை தெரியவில்லை

**விடை : வாஷிங்டன்**

- இந்த நிகழ்ச்சியில் இந்தியாவின் சார்பில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டார

3. 2025 ஆம் ஆண்டு கோகோ உலகக்கோப்பை போட்டி எந்த நாட்டில் நடைபெற உள்ளது

(A) இந்தியா (B) ஜெர்மனி

(C) இங்கிலாந்து (D) பிரேசில்

(E) விடை தெரியவில்லை

**விடை : இந்தியா**

- தில்லியில் ஜனவரி 13 முதல் 19 வரை நடைபெற உள்ளது
- இந்தப் போட்டியில் 24 நாடுகள் பங்கேற்க உள்ளன

4. அண்மையில் உலகின் சிறந்த பள்ளிகள் தரவரிசையை வெளியிட்ட T 4 கல்வி நிறுவனம் எங்கு அமைந்துள்ளது

(A) புதுடெல்லி (B) நியூயார்க்

(C) ஜெனிவா (D) லண்டன்

(E) விடை தெரியவில்லை

**விடை - லண்டன்**

- இந்தியாவிலிருந்து தமிழகம் தில்லி மத்திய பிரதேச மாநிலங்களை சேர்ந்த மூன்று பள்ளிகள் இடம் பெற்றுள்ளன
    1. கல்வி இன்டர்நேஷனல் பள்ளி (மதுரை) - தமிழ்நாடு
    2. ரியான் இன்டர்நேஷனல் பள்ளி - தில்லி
    3. CM RAISE ( பள்ளிக் கல்விக்கான முதல்வரின் கிராமப்புற முயற்சி) வினோபா பள்ளி - மத்திய பிரதேசம்

5. " திராவிட இயக்கமும் கருப்பர் இயக்கமும்" என்ற நூலை எழுதியவர் யார்

(A) M. K. ஸ்டாலின் (B) K. வீரமணி

(C) துரைமுருகன் (D) K. பொன்முடி

(E) விடை தெரியவில்லை

**விடை - பொன்முடி**

- இந்த நூலை எழுதியவர் **க. பொன்முடி**
- இந்த நூல் ஆங்கில மொழியில் எழுதப்பட்டது
- இந்நூலை வெளியிட்டவர் தமிழக முதல்வர் **மு க ஸ்டாலின்**
- இந்நூலின் முதல் பிரதியை பெற்றுக் கொண்டவர் **கி வீரமணி**

(குறிப்பு- **தாய் வீட்டில் கலைஞர்** என்ற நூலை எழுதியவர் **எ. வ வேலு**)

6. நாட்டில் காற்று மாசு குறைவாக உள்ள நகரங்களில் முதலிடத்தில் உள்ள நகரம் எது?

(A) பாலசோர்  (B) ராமநாதபுரம்

(C) பல்கலைப் பேரூர், திருச்சி  (D) சிக்கமங்களூர்

(E) விடை தெரியவில்லை

**விடை - பல்கலைப் பேரூர், திருச்சி**

| காற்று மாசு குறைவான நகரங்கள் | மாநிலம் | ஏ.க்யூ.ஐ. |
|---|---|---|
| 1. பல்கலைப் பேரூர்,திருச்சி | தமிழ்நாடு | 20 |
| 2. பாலசோர் | ஒடிஸா | 23 |
| 3. ஐசால் | மிஸோரம் | 25 |
| 4. ராமநாதபுரம் | தமிழ்நாடு | 25 |
| 5. சிக்கபல்லாபூர் | கர்நாடகம் | 28 |
| 6. மதிக்கேரி | கர்நாடகம் | 29 |
| 7. மதுரை | தமிழ்நாடு | 29 |
| 8. சிக்கமகளூரு | கர்நாடகம் | 30 |
| 9. காங்டாக் | சிக்கிம் | 30 |
| 10. நகான் | அஸ்ஸாம் | 30 |

7. நாட்டில் காற்று மாசு அதிகமாக உள்ள நகரங்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ள நகரம் எது?

(A) தில்லி  (B) மீரட்

(C) காஜியாபாத்  (D) பிவானி

(E) விடை தெரியவில்லை

**விடை - தில்லி**

EACH FOR KNOWLED

| அதிக காற்று மாசு நகரங்கள் | மாநிலம | ஏ.க்யூ.ஐ |
|---|---|---|
| 1. தில்லி | தில்லி யூனியன் பிரதேசம் | 306 |
| 2. மீரட் | உத்தர பிரதேசம் | 293 |
| 3. காஜியாபாத் | உத்தர பிரதேசம் | 272 |
| 4. பிவானி | ஹரியாணா | 266 |
| 5. ஹபூர் | உத்தர பிரதேசம் | 261 |
| 6. ஜிந்த் | ஹரியாணா | 261 |
| 7. சர்கி தாத்ரி | ஹரியாணா | 260 |
| 8. ஜுன்ஜுனு | ராஜஸ்தான் | 260 |
| 9. பாக்பட் | உத்தர பிரதேசம் | 257 |
| 10. ஹனுமன்கர் | ராஜஸ்தான் | 255 |

8. மதுரை மாவட்டம் தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனை எந்த ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது?

(A) 2016  (B) 2019

(C) 2021  (D) 2014

(E) விடை தெரியவில்லை

**விடை - 2019**

- மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கான அறிவிப்பை 2015-16 நிதிநிலை உரையின் போது நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளியிட்டார்
- மதுரை மாவட்டம் தோப்பூரில் 2019 ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அடிக்கல் நாட்டினார்
- 2026 அக்டோபரில் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை முழு செயல்பாட்டிற்கு வரும்

9. அமெரிக்காவிலிருந்து வெளியாகும் பொருளாதார பத்திரிக்கையான "குளோபல் பைனான்ஸ்" என்ற நிறுவனம் இந்தியாவின் சிறந்த வங்கியாக எந்த வங்கியை தேர்வு செய்துள்ளது

(A) ரிசர்வ் வங்கி (B) பாரத ஸ்டேட் வங்கி
(C) இந்தியன் வங்கி (D) Yes வங்கி
(E) விடை தெரியவில்லை

**விடை பாரத ஸ்டேட் வங்கி(SBI)**

**பாரத ஸ்டேட் வங்கி**

- உருவாக்கம் - **1. July. 1995**
- தலைமையிடம் - **மும்பை**
- பாரத ஸ்டேட் வங்கியில் தற்போதைய தலைவர் **சி எஸ் ரெட்டி**

10. சர்வதேச நிதியம் (IMF), உலக வங்கி மாநாடு அண்மையில் எங்கு நடைபெற்றது

(A) நியூயார்க் (B) வாஷிங்டன்
(C) ஜெனிவா (D) சிங்கப்பூர்
(E) விடை தெரியவில்லை

**விடை - வாஷிங்டன்**

**சர்வதேச நாணய நிதியம் (IMF) - International Monetary Fund**

- உருவாக்கம் 1994
- தலைமையிடம் வாஷிங்டன்
- உறுப்பு நாடுகள் 191

11. உலக போலியோ தினம்

(A) அக்டோபர் 22 (B) அக்டோபர் 24
(C) அக்டோபர் 26 (D) அக்டோபர் 23
(E) விடை தெரியவில்லை

**அக்டோபர் 24**

- Theme(2024) - "The road to zero polio in Africa"
- 2014 : மார்ச் 27, 2014 அன்று இந்தியா போலியோ இல்லாத நாடாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது

12. ஐ. நா சபை நாள்

(A) அக்டோபர் 27 (B) அக்டோபர் 29

(C) அக்டோபர் 24 (D) அக்டோபர் 26

(E) விடை தெரியவில்லை

**விடை - அக்டோபர் 24**

**ஐக்கிய நாடுகள் சபை (United nation)**

- உருவாக்கம் - 24 அக்டோபர் 1945
- உருவாக்கப்பட்ட இடம் - San Francisco, California ( அமெரிக்கா)
- தலைமையிடம் - New York
- உறுப்பு நாடுகள் - 193

13. 78 வது தரைப்படை தினம் 78th infantry day 2024

(A) அக்டோபர் 27 (B) அக்டோபர் 29

(C) அக்டோபர் 22 (D) அக்டோபர் 26

(E) விடை தெரியவில்லை

**விடை - அக்டோபர் 27**

இந்தியாவில் முதல் தரைப்படை தினம் 27 அக்டோபர் 1945 இல் அனுசரிக்கப்பட்டது

14. பிரதமரின் மனதின் குரல் நிகழ்ச்சி ( மன் கீ பாத்) தொடங்கப்பட்ட நாள் எது

(A) 2 அக்டோபர் 2014 (B) 3 அக்டோபர் 2014

(C) 6 அக்டோபர் 2014 (D) 8 அக்டோபர் 2014

(E) விடை தெரியவில்லை

**விடை - 3 அக்டோபர் 2014**

- ஒவ்வொரு மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் வானொலி வாயிலாக நாட்டு மக்களிடையே உரையாற்றும் நிகழ்ச்சி.
- இந்திய அனிமேஷன் தொடர் சர்வதேச அளவில் பிரபலமடைந்து வருவது குறித்து பிரதமர் மோடி கூறியுள்ளார்

- இந்திய தொலைக்காட்சிகளில் தொடங்கப்பட்ட சோட்டா பீம் நமது நாட்டில் மட்டுமல்ல பிற நாடுகளின் குழந்தைகளையும் மிகவும் கவர்ந்திருக்கிறது
- நமது பிற அனிமேஷன் தொடர்களான கிருஷ்ணா அனுமன் மோடூ பத்லூ போன்றவை விரும்புவோர் உலகெங்கிலும் இருக்கிறார்கள்

15. மத்திய அரசின் இலவச காப்பீட்டு திட்டமான ஆயுஷ்மான் பாரத் எத்தனை லட்சம் வரை இலவச மருத்துவ காப்பீடு வழங்கப்படுகிறது

(A) மூன்று லட்சம் (B) 5 லட்சம்

(C) ஏழு லட்சம் (D) 10 லட்சம்

(E) விடை தெரியவில்லை

**விடை : 5 லட்சம்**

- மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் இலவச மருத்துவ காப்பீட்டு திட்டம் 23 செப்டம்பர் 2018 இல் தொடங்கப்பட்டது
- இத்திட்டத்தின் நோக்கம் ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக மருத்துவ காப்பீடு வழங்கப்படுவது
- தற்போது இந்தத் திட்டத்தை 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மூத்த குடிமகள் அனைவருக்கும் காப்பீடு வழங்கும் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி அக்டோபர் 30 தொடங்கி வைத்தார்

16. கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்கு தடுப்பூசி முறையாக செலுத்தப்படுவதை பதிவு செய்ய அண்மையில் தொடங்கப்பட்ட இணையதளம் எது?

(A) U - win (B) U - med

(C) M - win (D) Ko - win

(E) விடை தெரியவில்லை

**விடை - U - win**

- கருணா காலத்தில் தடுப்பூசி செலுத்தப்பட்டதை பதிவு செய்ய தொடங்கப்பட்ட கோ வின் இணையதளத்தை முன்மாதிரியாக கொண்டு இந்த தடுப்பூசி பதிவு செய்யும் திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது

17. ஜப்பான் ஓபன் மகளிர் டென்னிஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றவர் யார்

(A) ஜெங்கின்வென் (B) சோபியா கேனின்

(C) சோபி டிவைன் (D) மேற்கண்ட எவரும் இல்லை

(E) விடை தெரியவில்லை

**விடை - ஜென்கின்வென் ( சீன நாட்டை சேர்ந்தவர்)**

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்றது

- Runner - சோபியா கெனின் ( அமெரிக்கா)

18. 23 வயதுக்குட்பட்டோருக்கான உலகம் மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி எங்கு நடைபெற்றது

(A) இந்தியா (B) ஆப்கானிஸ்தான்

(C) அஜர்பைஜான் (D) அல்பேனியா

(E) விடை தெரியவில்லை

**விடை - அல்பேனியா**

- இந்தப் போட்டியில் இந்தியாவை சேர்ந்த அஞ்சலி 59 கிலோ எடை பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றார்

19. உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி எங்கு நடைபெற்றது

(A) பிரான்ஸ் (B) ஜப்பான்

(C) கனடா (D) சீனா

(E) விடை தெரியவில்லை

**விடை - பிரான்ஸ்**

20. சர்வதேச பாரா பேட்மிட்டன் போட்டி எங்கு நடைபெற்றது

(A) இந்தியா (B) டோக்கியோ

(C) பாரிஸ் (D) மணிலா

(E) விடை தெரியவில்லை

**விடை - டோக்கியோ (ஜப்பான் தலைநகர்)**

- இந்தப் போட்டியில் இந்தியர்கள் ஆறு தங்கம் 9 வெள்ளி 9 வெண்கலம் என 24 பதக்கங்களை வென்றனர்

21. World Stroke Day உலக பக்கவாத தினம்

(A) அக்டோபர் 31 (B) அக்டோபர் 26

(C) அக்டோபர் 24 (D) அக்டோபர் 29

(E) விடை தெரியவில்லை

**விடை - அக்டோபர் 29**

- 2024 theme - #GreaterThanStroke

22. தமிழ்நாடு எந்த ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை அடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது

(A) 2026 (B) 2029

(C) 2030 (D) 2036

(E) விடை தெரியவில்லை

**விடை 2030**

- இந்தியா ஐந்து ட்ரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை அடைய 2027 ஆம் ஆண்டை இலக்காக நிர்ணயத்துள்ளது

23. ஆளுமையைத் தேர்க

1. உலக அளவில் செஸ் போட்டியில் 2800 இ எல் ஓ புள்ளிகளை தொட்ட 16வது வீரரானார்
2. இந்திய அளவில் கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்திற்கு பிறகு இச்சாதனையை படைத்த இரண்டாவது வீரரானார்

(A) குகேஷ் (B) பிரஞ்ஞானந்தா

(C) அர்ஜுன் ஏரிகாசி (D) வைஷாலி

(E) விடை தெரியவில்லை

**விடை - அர்ஜுன் ஏரிகாசி**

REACH FOR KNOWLEDGE

24. ஒன்பதாவது மகளிர் டி20 உலகக்கோப்பை இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற நாடு எது

(A) இந்தியா (B) தென்னாப்பிரிக்கா

(C) நியூசிலாந்து (D) ஆஸ்திரேலியா

(E) விடை தெரியவில்லை

**விடை** - நியூசிலாந்து

- போட்டி நடைபெற்ற இடம் - துபாய் (ஐக்கிய அரபு அமீரகம்)
- Winner - நியூசிலாந்து
- Runner - தென் ஆப்பிரிக்கா
- நியூசிலாந்து அணி முதல் முறையாக சாம்பியன் ஆனது
- ஒட்டுமொத்த கிரிக்கெட் டி20 வரலாற்றில் நியூசிலாந்து வென்றிருக்கும் முதல் உலகக்கோப்பை இது.

25. நாட்டின் முதல் தனியார் ராணுவ விமான தயாரிப்பு ஆலையை பிரதமர் நரேந்திர மோடி எங்கு துவங்கி வைத்தார்?

(A) வதோதரா (B) சூரத்

(C) லக்னோ (D) மும்பை

(E) விடை தெரியவில்லை

**விடை** - வதோதரா ( குஜராத்)

- டாட்டா குழுமம் அமைத்துள்ள இந்த ஆலையில் ஏர்பஸ் விமானங்கள் தயாரிப்பு நிறுவனத்துடன் இணைந்து சி -295 ராணுவ பயன்பாட்டு விமானங்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட உள்ளன.
- இந்திய விமானப்படையின் பழைய அவ்ரோ -748 விமானங்களுக்கு பதிலாக 56, சி - 295 விமானங்களை வாங்குவதற்கு ஏர்பஸ் நிறுவனத்துடன் 21,000 கோடி மதிப்பீட்டில் கடந்த 2021 ஆம் ஆண்டு இந்தியா ஒப்பந்தம் செய்தது.
- நாட்டின் முதல் தனியார் ராணுவ விமானம் 2026 ஆம் ஆண்டு வெளியாகும் என்று தெரிவிப்பு
- இந்தியாவின் இந்த விமானங்களை தயாரிக்கும் பணி tata குழுமத்தை சேர்ந்த டாட்டா அட்வான்ஸ் சிஸ்டம்ஸ் நிறுவனத்திடம் 2022 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**குறிப்பு** - சி - 295 போர் விமானம் என்பது ஒரு நடுத்தர ராணுவ போக்குவரத்து விமானம் ஆகும் இந்த விமானம் குறுகிய ஓடுபாதைகள் மற்றும் கடுமையான சூழல்களில் இருந்து செயல்படும் திறனுக்காக அறியப்படுகிறது இதனால் வீரர்கள் போக்குவரத்து அவசரக்கால மருத்துவ உதவிகள் சரக்கு விநியோகம் மற்றும் வான் தீயை அணைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை செய்ய முடியும்.

26. தமிழ்நாட்டில் பாதம் பாதுகாப்போம் திட்டம் பின்வருவனவற்றுள் யாருக்காக தொடங்கப்பட உள்ளது?

(A) குழந்தைகள் (B) சர்க்கரை நோயாளிகள்

(C) மாற்றுத்திறனாளிகள் (D) 45 வயதிற்கு மேற்பட்டவர்கள்

(E) விடை தெரியவில்லை

**விடை** - சர்க்கரை நோயாளிகள்

- சர்க்கரை நோயாளிகளுக்கான பாதம் பாதுகாப்போம் திட்டத்தை தமிழகத்தின் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் அரசு மருத்துவமனைகள் தொடங்குவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.
- பாதம் பாதுகாப்போம் திட்டம் சர்க்கரை நோய் பாத பாதிப்புகளை தவிர்ப்பதற்கும் கால் இழப்புகளை ஏற்படுவதை தடுப்பதற்கும் வழிவகை செய்கிறது.

- மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் இத்திட்டம் கட்டமைக்கப்பட்டு ஒருங்கிணைந்த பாத மருத்துவ சேவைகளை 36 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மூலம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.
- நாட்டிலேயே இது போன்ற முன்னெடுப்பை அரசு மேற்கொள்வது இதுவே முதல் முறை.

27. 23 வயதுக்குட்பட்டோருக்கான உலக சாம்பியன்ஷிப்பில் வாகை சூடிய முதல் இந்தியர் யார்

(A) சிராக் சிகாரா (B) அமன் ஷெராவத்

(C) ரீதிகா ஹூடா (D) மேற்கண்ட அனைத்தும்

(E) விடை தெரியவில்லை

**விடை** - அமன் ஷெராவத்

- 2022 - அமன் ஷெராவத்
- 2023 - ரீதிகா ஜூடா
- 2024 - சிராக் சிகாரா
- 23 வயதிற்குட்பட்டோருக்கான யூ 23 உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி அல்பேனியா நாட்டில் நடைபெற்றது.

28. 8 ஆவது மகளிர் ஆசிய சேம்பியன் கோப்பை ஹாக்கி போட்டி எங்கு நடைபெற உள்ளது?

(A) சென்னை (B) ஒடிஸா

(C) பீகார் (D) குஜராத்

(E) விடை தெரியவில்லை

**விடை** - குஜராத்தில் நவம்பரில் நடைபெற உள்ளது.

29. எட்டாவது ஆசிய மகளிர் ஆசிய சேம்பியன் கோப்பையில் இந்திய அணியின் கேப்டன் யார்

(A) கலிமா டெடெ (B) நவ்னீத் கௌர்

(C) A & C (D) மேற்கண்ட எதுவும் இல்லை

(E) விடை தெரியவில்லை

**விடை** - கலிமா டெடெ

- துணை கேப்டன் - நவ்னீத் கௌர்
- மொத்தம் 18 பேர்.

30. சோராய் ஓவியம் எந்த மாநிலத்தின் பாரம்பரிய ஓவியம் ஆகும்

(A) ஒடிஸா (B) ஜார்க்கண்ட்

(C) நாகலாந்து (D) சத்தீஸ்கர்

(E) விடை தெரியவில்லை

**விடை** - ஜார்கண்ட்

- ஜார்க்கண்ட் மாநிலத்தின் பாரம்பரிய சோராய் ஓவியம் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினிற்கு பிரதமர் நரேந்திர மோடி பரிசளித்தார்.
- இந்த வகை ஓவியங்கள் மிகவும் நேர்த்தியாகவும் கலை நயத்துடனும் திட்டமிடப்படுகின்றன
- வைக்கோல் அல்லது விரல்களையே தூரிகையாகக் கொண்டு இந்த ஓவியங்கள் வரையப்படுகின்றன
- இந்த ஓவியங்களில் வழக்கமாக விலங்குகள் பறவைகள் இயற்கை காட்சிகள் என ஒரு விவசாயியின் வாழ்க்கையை விளக்கும் காட்சிகள் இடம் பெறும்
- ஜார்க்கண்ட் உள்ளூர் பழங்குடியின மக்களின் வாழ்க்கை பற்றிய காட்சிகளும் அந்த ஓவியங்களில் இடம் பெற்று இருக்கும்
- இந்த ஓவியத்திற்கு 2014 ஆம் ஆண்டு புவிசார் குறியீடு அங்கீகாரம் கிடைத்தது குறிப்பிடத்தக்கது

31. ஒரு மொழி செம்மொழிக்கான தகுதிகள் எவை?

1. ஒரு மொழியானது 1500 ஆண்டுகள் முதல் 2000 ஆண்டுகள் வரையிலான வரலாறு பழமையான இலக்கியங்கள் கொண்டதாக இருக்க வேண்டும்
2. அம்மொழியின் தொடக்க கால இலக்கியங்கள் உயர்தரத்தில் இருக்க வேண்டும்
3. இலக்கிய மரபுகள் அம்மொழிக்கு உரியவையாக இருத்தல் வேண்டும்
4. தொன்மை தனித்தன்மை பொதுமை பண்பு நடுநிலைமை கிளை மொழிகளின் தாய் பட்டறிவு இலக்கியங்கள் பிறமொழித் தன்மை சமய சார்பு உயர் சிந்தனைகளை மொழிக் கோட்பாடுகள் போன்ற அம்சங்களில் செம்மொழிகள் குறித்தான தகுதி வரையறுக்கப்படுகிறது

(A) அனைத்தும் சரி (B) 1,2, 3 சரி

(C) 1, 2 , 4 சரி (D) 2, 3, 4 சரி

(E) விடை தெரியவில்லை

**விடை** - அனைத்தும் சரி

32. உலக செம்மொழியாக கருதப்படும் மொழிகள் மொத்தம் எத்தனை

(A) 6 (B) 8

(C) 7 (D) 12

(E) விடை தெரியவில்லை

**விடை** - எட்டு

- கிரேக்கம், சமஸ்கிருதம் ,லத்தின் ,பாரசீகம், அரபு ,எபிரேயம் சீனம் மற்றும் தமிழ்

33. 9வது ஆயுர்வேத நாள்

(A) அக்டோபர் 29 (B) அக்டோபர் 27

(C) அக்டோபர் 30 (D) அக்டோபர் 28

(E) விடை தெரியவில்லை

**விடை** -அக்டோபர் 29

- மருத்துவக் கடவுளான தன்வந்திரி பகவானின் பிறந்தநாள் 2016 ஆம் ஆண்டில் இருந்து கொண்டாடப்பட்டு வருகிறது

34. ஆயுஷ்மான் பாரத் இலவச மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் எத்தனை வயது வரை உள்ள நபர்களுக்கு 5 லட்சம் வரை மருத்துவ காப்பீடு வழங்கும் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அண்மையில் தொடங்கி வைத்தார்

(A) 60 வயது வரை (B) 65 வயது வரை

(C) 70 வயது வரை (D) 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது

(E) விடை தெரியவில்லை

**விடை** - 70 மற்றும் 70 வயதிற்கு மேற்பட்டவர்கள்

- இது புது டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது

35. தமிழகத்தின் அதிக வாக்காளர்களைக் கொண்ட பேரவை தொகுதி எது?

(A) ஆயிரம் விளக்கு (B) சோழிங்கநல்லூர்

(C) சூலூர் (D) காஞ்சிபுரம்

(E) விடை தெரியவில்லை

**Answer** - சோழிங்கநல்லூர்

**தமிழகத்தின் வரைவு வாக்காளர் பட்டியல்**

- வெளியீடு - தமிழக தேர்தல் ஆணையம்
- மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை - 6 கோடியே 27 லட்சத்து 30 ஆயிரத்து 588
- ஆண்கள் - 3 கோடியே 7 லட்சத்து 90 ஆயிரத்து 791.
- பெண்கள் - கோடியே 19 லட்சத்து 30 ஆயிரத்து 833
- மூன்றாம் பாலினத்தவர் - 8964
- அதிக வாக்காளர்கள் கொண்ட பேரவை தொகுதி - சோழிங்கநல்லூர் (6.76 இலட்சம்)
- குறைந்த வாக்காளர் கொண்ட தொகுதி - கீழ்வேளூர்( நாகை மாவட்டம்)

36. இந்தியாவின் இரும்பு மனிதர் என்று போற்றப்படும் நாட்டின் முதல் உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் படேலுக்கு எந்த ஆண்டு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது?

(A) 1963 (B) 1972

(C) 1984 (D) 1991

(E) விடை தெரியவில்லை

**விடை**: 1991

- சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் பிறந்தநாள் அக்டோபர் 31 தேசிய ஒற்றுமை தினமாக மத்திய அரசு 2014 ஆம் ஆண்டு முதல் கடைப்பிடித்து வருகிறது
- சர்தார் வல்லபாய் படேலின் மிக உயரமான சிலையை குஜராத் மாநிலம் நர்மதை நதிக்கரையின் அருகில் நிறுவப்பட்டுள்ளது

37. ஒரு நாள் கிரிக்கெட் டில் மகளிர் பிரிவில் அதிக சதங்களை எட்டிய வீராங்கனை யார்

(A) மிதாலி ராஜ் (B) ஹர்மன்பரீத் கௌர்

(C) ஜார்ஜியா (D) ஸ்மிருதி மந்தனா

(E) விடை தெரியவில்லை

**விடை** - ஸ்ருதி மந்தனா

- ஸ்ருதி மந்தனா எட்டாவது சதத்தை அடித்து இந்திய மகளிர் அதிக சதம் அடித்தவராக சாதனை படைத்தார்
- இதற்கு முன்பு முன்னாள் கேப்டன் மிதாலி ராஜ் அவர்கள் ஏழு சதங்கள் அடித்ததே சாதனையாக இருந்த நிலையில் தற்போது மந்தனா அதை முறியடித்திருக்கிறார்

38. உலக சிக்கன நாள்

(A) அக்டோபர் 29 (B) அக்டோபர் 30

(C) அக்டோபர் 31 (D) அக்டோபர் 28

(E) விடை தெரியவில்லை

**விடை** - அக்டோபர் 30

39. இந்தியாவில் தற்போது வரை எத்தனை நபர்களுக்கு நபர்களுக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டுள்ளது

(A) 23 (B) 34

(C) 82 (D) 53

(E) விடை தெரியவில்லை

**விடை** - 53

- பாரத ரத்னா விருது இந்தியாவின் மிக உயரிய விருதாகும்

40. பின்வரும் எந்த நாடு 'சென்ஷூ' 19 என்ற விண்கலம் மூலம் 'தியாங்காங்' விண்வெளி மையத்தை அடைவதற்காக மூன்று விண்வெளி வீரர்களை சர்வதேச விண்வெளி மையத்திற்கு அனுப்பப்பட்டது?

(A) சீனா (B) ரஷ்யா

(C) பிரான்ஸ் (D) அமெரிக்கா

(E) விடை தெரியவில்லை

**விடை** - சீனா

- ரஷ்யா அமெரிக்கா பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளின் பங்களிப்பில் சர்வதேச விண்வெளி நிலையம் செயல்பட்டு வருகிறது.
- அதில் இடம்பெறாத சீனா தனியாக விண்வெளி நிலையம் ஒன்றை கட்டமைத்துள்ளது.
- தியாங்காங் எனப் பயிரிடப்பட்டுள்ள இந்த விண்வெளி நிலையத்திற்கான மையத் தொகுதி கடந்த ஏப்ரல் 29 2021 ஆம் ஆண்டு சுற்றுவட்ட பாதையில் நிலை நிறுத்தப்பட்டது.

41. பர்னவாபரா வனவிலங்கு சரணாலயம் (Barnawapara wildlife sanctuary ) எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

A) மத்திய பிரதேசம் B) ஒடிசா C) ஜார்கண்ட் D) சத்தீஸ்கர்

**விடை** - சத்தீஸ்கர்

42. ரதபானி வனவிலங்கு சரணாலயம் (Ratapani Wildlife Sanctuary) எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

A) குஜராத் B) ராஜஸ்தான் C) மத்தியப் பிரதேசம் D) உத்தரப் பிரதேசம்

**விடை** - மத்தியப் பிரதேசம்

43. பதுகம்மா பண்டிகை (Bathukamma festival) எந்த மாநிலத்தில் முக்கியமாக கொண்டாடப்படுகிறது?

A) தெலுங்கானா B) கர்நாடகா C) மகாராஷ்டிரா D) கேரளா

**விடை** – தெலுங்கானா

44. 5வது தேசிய நீர் விருதுகள் 2023 இல் எந்த மாநிலம் சிறந்த மாநில விருதைப் பெற்றுள்ளது?

A) ஒடிசா B) ஜார்கண்ட் C) பீகார் D) குஜராத்

**விடை** – ஒடிசா

45. செய்திகளில் காணப்பட்ட காரகோரம் வனவிலங்கு சரணாலயம் எந்த மாநிலத்தில்/யூடியில் அமைந்துள்ளது?

A) லடாக் B) மத்திய பிரதேசம் C) ராஜஸ்தான் D) ஜம்மு மற்றும் காஷ்மீர்

**விடை** – லடாக்

46. எந்த அமைப்பு 2024 இல் கைகோர்த்து முதலீட்டு மன்றத்தை துவக்கியுள்ளது?

A) உலக சுகாதார நிறுவனம் (WHO) B) உலக வர்த்தக அமைப்பு (WTO)

C) சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) D) உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO)

**விடை** - உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO)

1. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) 2024 இல் ஹேண்ட்-இன்-ஹேண்ட் முதலீட்டு மன்றத்தைத் தொடங்கியது.
2. 2019 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஹேண்ட்-இன்-ஹேண்ட் முன்முயற்சி, உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், வறுமையைக் குறைப்பதற்கும், குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் கூட்டாண்மை மற்றும் முதலீடுகளில் கவனம் செலுத்துகிறது.
3. இந்த முயற்சியானது மூன்று நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது: வறுமையை ஒழித்தல் (SDG 1), பசியை ஒழித்தல் (SDG 2) மற்றும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் (SDG 10).
4. ஹேண்ட்-இன்- ஹேண்ட் முயற்சியில் இந்தியா சேரவில்லை.

47. 75வது சர்வதேச விண்வெளி மாநாடு (IAC) எங்கு நடைபெற்றது?

A) லண்டன், UK B) மிலன், இத்தாலி C) பாரிஸ், பிரான்ஸ் D) புது தில்லி, இந்தியா

**விடை** - மிலன், இத்தாலி